## 7 சட்டமன்றத் தொகுதிகளில்

# ‘தமிழ்நாடு தலைகுனியாது’ - இரண்டாம் நாள் பரப்புரை!

## மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டனர்!










**சென்னை,பிப்.5 -**

**தமிழ்நாடு தலைகுனியாது - இரண்டாம் நாள் பரப்புரை கழகத் தலைவர் அறிவித்தபடி திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கியும், ஒன்றிய பா.ஜ.க. மற்றும் அடிமை NDA கூட்டணி தமிழ்நாட்டுக்கு இழைத்து வரும் அநீதியையும் மக்கள் முன்பு எடுத்துரைக்கும் விதமாகவும் “தமிழ்நாடு தலைகுனியாது” பரப்புரையானது 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் கழகத்தின் சார்பில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.**

இரண்டாம்நாளான 02.02.2026 அன்று 7 சட்டமன்றத் தொகுதிகளில் பிரச்சாரமானது மாபெரும் எழுச்சியோடு நடைபெற்றது.

பூந்தமல்லியில் இனிகோ இருதயராஜ் , ஆயிரம் விளக்கில் எம்.எம்.அப்துல்லா, செங்கல்பட்டில் திண்டுக்கல் ஐ. லியோனி, ஜோலார்பேட்டையில் சபாபதி மோகன், ஓமலூரில் கோவி.செழியன், நத்தம் தொகுதியில் பொன் முத்துராமலிங்கம், விளாத்திகுளத்தில் மனோஜ் பாண்டியன் உள்ளிட்ட கழக நட்சத்திரப் பரப்புரையாளர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

இப்பரப்புரையின் போது ஒன்றிய பா.ஜ.க. அரசின் பட்ஜெட்டில் தமிழ்நாடு புறக்கணி க்கப்பட்டதை மக்கள் முன் வெட்ட வெளிச்சம் போட்டு காட்டினர் கழக பேச்சாளர்கள். வழக்கமாக பெயரளவுக்கு திருக்குறளை யாவது மேற்கோள் காட்டுவார்கள். ஆனால் இம்முறை அதைக் கூட செய்ய ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு மனமில்லை; அதேபோல நமக்கு ஒதுக்க வேண்டிய கல்வி நிதி ரூ.3458 கோடி, நூறு நாள் வேலை திட்ட நிதி சுமார் 2000 கோடி, குடிநீர்இணைப்பு ரூ.3112 கோடி உள்ளிட்ட எந்த நிதி ஒதுக்கீடு பற்றிய அறிவிப்பும் இல்லாதது, புதிய வளர்ச்சி திட்டங்கள் தமிழ்நாட்டுக்கு இல்லாதது என வழக்கம் போல இந்த முறையும் தமிழ்நாட்டு மக்களுக்கு ஒன்றிய பட்ஜெட்டில் அல்வா மட்டுமே கொடுத்துள்ள ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையை விளக்கும் வகையில் பொதுமக்களுக்கு ‘இது மோடி கொடுத்த அல்வா’ என அச்சிடப்பட்ட துண்டறிக்கையில் அல்வா விநியோகிக்கப்பட்டது. இவை மக்களிடையே பெருத்த வரவேற்பை பெற்றது.

அதோடு இப்பரப்புரையின் போது திராவிட மாடல் அரசின் சாதனை திட்டங்களும் அதனால் தமிழ்நாட்டு மக்களும் தமிழ்நாடும் அடைந்து வரும் வளர்ச்சி பற்றியும் மக்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.



பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ் 03.02.2026 அன்று சென்னை, தேவராஜ முதலி தெரு, சென்னமல்லீஸ்வரர் திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பொதுமக்களுக்கு உணவு பரிமாறினார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா 03.02.2026 அன்று சென்னை, பூங்கா நகர், முத்துக்குமாரசுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, பொதுமக்களுடன் உணவு அருந்தினார்.